கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 427/2017 வா.சா.1 நிர்மலாதேவி

2022 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.த.சா.1 ஆன என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்., கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | நிர்மலாதேவி | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | சின்னத்துரை | ஜாதி | – | |
| கிராமம் | – | அம்பால்நகர் மேற்கு தாம்பரணம் சென்னை | வயது | – | 65 |
| தாலூக்கா | – | சென்னை | தேதி | – | 05.03.2022 |

முதல் விசாரணை

நான் அம்பால்நகர் மேற்கு தாம்பரணம் சென்னையில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

என்னுடைய பெயரில் உள்ள வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் ஒளிநகல் குறியீடு செய்யப்படுகிறது. அது வா.சா.ஆ.1 ஆகும். 21.03.2014 தேதியில் என் கணவர் சின்னத்துரை காலமானதற்கான இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.2 ஆகும். 25.04.1981 தேதியில் எனது மகள் பிரியா பிறந்ததற்கான பிறப்பு சான்று உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகும். 12.08.2016 தேதியில் எனது பேத்தி காததணிவிழாவிற்கான அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகும். 02.09.2016 தேதியில் எனது மகள் பிரியாவிற்கு எனது வழக்கறிஞர் மூலம் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகும். 02.09.2016 தேதியில் எனது மாமியாரான 1 ம் பிரதிவாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகும். 30.08.2017 தேதியில் 3 ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று பெறுவதற்காக அளிக்கப்பட்ட விண்ணப்பம் ஒளிநகல் வா.சா.ஆ.7 ஆகும். 07.10.2017 ம் தேதியிட்ட பொள்ளாச்சி வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணையின் ஒளி

நகல் வா.சா.ஆ.8 ஆகும். 20.10.2017 தேதியில் 3ம்பிரதிவாதிக்கு தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் நான் அனுப்பிய விண்ணப்பம் ஒளிநகல் வா.சா.ஆ.9 ஆகும். (வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 ஆவணங்கள் 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுன் குறியீடு செய்யப்படுகிறது ) மேற்படி விண்ணப்பத்திற்கு பொள்ளாச்சி துணை வட்டாட்சியரிடம் இருந்து 30.10.2017 ம்தேதியில் அனுப்பப்பட்ட பதில் அசல் வா.சா.ஆ.10 ஆகும். மேற்படி பதிலுக்கு எதிராக 25.11.2017 தேதியில் கோயமுத்தூர் மாவட்ட ஆட்சியருக்கு நான் அனுப்பிய மேல்முறையீட்டு மனு அலுவலக நகல் வா.சா.ஆ.11 ஆகும். 07.09.2017 ம் தேதியில் 2ம் பிரதிவாதி மற்றும் அவரது மகள் மற்றும் மருமகனுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.12 ஆகும். மேற்படி அறிவிப்பை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.13 ஆகும். மேற்படி அறிவிப்பை 2ம் பிரதிவாதியின் மகள் மற்றும் மருமகன் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதற்கான அஞ்சல் உறைகள் அசல் வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**(ஒப்பம்)/– P. சுபாஷினி**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.